2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

110—ன்கீழ் வெளியிட்ட 181 அறிவிப்புகள், ஒவ்வொன்றும் மகுடத்திலே பதித்த நவரத்தினம்; குழந்தைகள் நலம் பேணும் கோமேதக அறிவிப்புகள்; சிறுவர்களைக் காக்கும் மரகத அறிவிப்புகள்; இளைஞர்களை உயர்த்திடும் இரத்தின அறிவிப்புகள்; முதியவர்களைக் காத்திடும் முத்தான அறிவிப்புகள்; மாதர் குலம் போற்றும் மாணிக்க அறிவிப்புகள்; வறியவர்களை வாழ்வித்திடும் வைர அறிவிப்புகள்; தனியொரு தலைவியாகப் போராடி, வெற்றி பெற்று, தியாக சரித்திரம் படைத்த மாண்புமிகு அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110—ன்கீழ் வெளியிட்ட இந்த 181 அறிவிப்புகளையும் இந்த நூற்றாண்டு மட்டுமா போற்றிப் புகழும், மனித சமுதாயம் ஏழு பிறப்பும் போற்றுமே! (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டுமே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இப்பேரவையின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—15

4. தகவல் கோரல்

(அ) சத்துணவு ஊழியர்கள் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சத்துணவு ஊழியர்கள் ** குறித்து விவாதிக்க வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் உறுப்பினர் இன்று காலை 10—15 மணிக்குதான் அறிவிப்பை இங்கு கொண்டு வந்து கொடுத்தார். (குறுக்கீடு) இல்லை, உங்கள் கட்சியின் கொறடா அவர்கள் 10—15—க்குத்தான் அறிவிப்பைக் கொண்டுவந்து கொடுத்தார். உடனே, அதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்றால் எப்படி? உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். இப்பொழுதுதான் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதனால், இப்பொழுது உட்காருங்கள். பிறகு பார்க்கலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். பிறகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2015 செப்டம்பர் 29

பார்க்கலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், (குறுக்கீடு) மற்றவர்களெல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடு) கட்சிக்கு ஒருவர் பேசட்டும். (குறுக்கீடு) கட்சிக்கு ஒருவர் பேசட்டும். திரு. துரைமுருகன் அவர்கள் சொல்லிவிட்டார்கள். திரு. அ. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் நேற்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. அ. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** சத்துணவு ஊழியர்கள் நேற்று அவர்கள் கோரிக்கைக்காகப் பேரணி வந்தபோது ** அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பிரச்சினையை பேசித் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதன்மீது என்ன நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், என்னவென்று சொல்லுங்கள்.

(ஆ) டெல்டா மாவட்டங்களுக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து காவேரி நீர் பெற நடவடிக்கை

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா பகுதியில் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னவென்று சொல்லவிடுங்கள். ஒரு வார்த்தையாவது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) முதலில் அவர்களுக்கு பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) அவர்களுக்கு பதில் சொல்லட்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.